1971 அக்டோபர் 23]

தனிப் பயிற்சிக் கல்லூரிகள்

* 32 வினா.—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

தனியாரால் நடத்தப்பட்டு வரும் தனிப் பயிற்சிக் கல்லூரிகளை (Tutorial Colleges) ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசிலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

மாயூரம் நகரில் உணவுக் கலப்பட வழக்குகள்

* 33 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969–70-ம் ஆண்டில் உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் மாயூரம் நகரில் தொடுக்கப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளில் எத்தனை பேருக்கு தண்டனை கிடைத்துள்ளது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) மாயூரத்தில் 1969–70-ஆம் ஆண்டில் உணவுக் கலப்படச் சட்டத்தின் கீழ் போடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 36. அந்த 36 பேர்களுக்கும் வெவ்வேறு வகையான தண்டனை கிடைத்திருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவர் அவர்களே, உணவுக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்படி, இரண்டாவது முறை தவறு செய்தால் அதிகமாகத் தண்டனை கொடுக்கவேண்டும் என்று குறிப்பு ஏற்கனவே இருக்கிறதே அம் மாதிரி தண்டனை அளிக்கப்பட்டவர்களின் விவரங்களைச் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது மாயூரம் நகரத்தில் மட்டும் போடப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையாகும். 36 வழக்குகளில் 32 பேருக்கு அபராதமும், மீதி 4 பேர்களில் மூன்று பேருக்கு சிறைத் தண்டனையும், ஒருவருக்கு அபராதமும் சிறைத் தண்டனையும் சேர்த்து விதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டாவது முறை அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளானவர்கள் ஒரு விதமான தண்டனைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்றுதான் எனக்கு யூகிக்க இடம் இருக்கிறது.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களில் கலப்படம் செய்தவர்களை பஞ்சாப் மாநிலத்தில் விலங்கிட்டு வீதி வழியே அழைத்துவந்து, அவர்கள் குற்றவாளிகள் என்ற எண்ணத்தை சமுதாயத்தில் உருவாக்குவதற்கு பஞ்சாப் மாநில அரசு செய்ததைப்போல் நம்முடைய மாநில அரசும் அத்தகைய தவறு செய்தவர்களுக்கு வெறும் அபராதமும் சிறைத் தண்டனையும் அளிப்பதோடு, விலங்கிட்டு அவர்களைத் தெருவில் அழைத்துச் செல்லவும் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது ஏற்பாடாகாது. அது சட்டமாகச் செய்யப்பட வேண்டிய நிலைமையில் இருக்கும். அது தேவையானால் பரிசீலிக்கப்படலாம். ஆனால், சமுதாயத்தில் மிகப் பலரைத் தண்டிக்கும் முறை வளருமானாலும்கூட, சமுதாயமே குற்றவாளிச் சமுதாயமாக மாறுவதற்கு அதுவும்கூட இடம் ஏற்படுத்திவிடும். எனவே,

சமுதாயத்தில் குற்றம் செய்யாமல் வாழுகிற மனப்பான்மை உருவாக வேண்டும். நம்முடைய மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்கள், சமுதாயத்தில் அந்த நல்ல கருத்துக்களை உருவாக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 36 வழக்குகள் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்த வகை உணவுப் பொருள்களில் கலப்படம் என்று விவரம் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அந்த விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

திரு. கே. என் குமாரசாமி : தலைவர் அவர்களே, உணவுக் கலப்படப் பிரச்சினையில் வருகிற பொருள்கள் எண்ணெய், பால், வெண்ணெய் போன்ற பொருள்கள்தான் அதிகமாக இருக்கின்றன. கலப்படம் செய்தவர்கள் தண்டனைக்குள்ளாகிறார்கள். ஆனால், அதே பொருள்களில் கலப்படம் செய்து ஓட்டல்களில் உணவாகக் கொடுக்கும்போது, அவர்கள் கலப்படம் செய்வதைப் பற்றி அரசாங்கம் ஏதாவது பரிசீலனை செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, வெண்ணெய், பால், எண்ணெய் போன்றவற்றை விற்பவர்கள் அவற்றைத் தனியாக விற்கிறார்கள். ஆகவே, அவற்றில் கலப்படம் செய்தால் தெரிந்துவிடும். ஆனால், ஓட்டலில் பண்டங்களைப் பெரும்பாலும் கலந்தே உணவுப்பொருளாக விற்பதால் அதிலிருந்து எந்த நல்ல பண்டங்களைக் கெடுத்துவிட்டார்கள் என்று தனியாகக் கண்டுபிடிப்பதற்கு எல்லா நேரத்திலும் இயலுவது இல்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இதுமாதிரி உணவுக் கலப்படம் செய்கிற இந்தக் கலையில் சென்னையில் உள்ள சில வியாபாரிகள் அரிசி மாதிரியான அதே அளவில் கற்களைத் தயாரித்து அரிசியில் கலந்தும், மிளகு மாதிரியான கற்களைத் தயாரித்து மிளகில் கலந்தும் தொழில் நடத்துகிறார்கள் என்ற தகவல் சில பத்திரிகைகளில் வருகின்றனவே, அப்படிப்பட்ட கலப்படப் பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங்களைக் கைப்பற்றும் தீவிர முறையை அரசு செயல்படுத்துமா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அப்படிப் பட்ட குற்றச்சாட்டு உள்ள பகுதிகளில் இது ஒரு முறை தீவிரப்படுத்தப் பட்டதாக நான் அறிகிறேன். மறுபடியும் தேவைப்படுகிறபோதெல்லாம் அதற்கான குறிப்புகள் அல்லது அப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கிற இடங்களைக் குறித்து யாரேனும் விவரம் தெரிவிப்பார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்தத் துறையினருக்கு ஆணையிட முடியும்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவர் அவர்களே, உணவுக் கலப்படத்திற்கு முக்கியமான காரணம் பற்றாக்குறை என்று கூறுகிறார்களே இதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொருள் பற்றாக் குறை அல்ல; அறிவீனமும் நாணயப் பற்றாக்குறையும் இருப்பதால் நடைபெறுகிற காரியம். (சிரிப்பு.)

1971 அக்டோபர் 23]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தக் கலப்படத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அதிகமாகத் தண்டனைக்கு ஆளாகியவர்கள் பால் உற்பத்தி செய்கின்ற ஏழை எளிய கிராம மக்களாக இருக்கிறார்கள். ஆனால், பாலில் தண்ணீரை விடாமல் சாப்பிடுவது கிடையாது. ஆகவே, அதற்காக அதிகமாகத் தண்டனை கொடுக்கக்கூடிய முறையை மாற்றி, பால் விற்கக்கூடியவர்கள் அதிகமாகத் தண்டனைக்காளாவதைத் தவிர்க்கும் வகையில் சட்டத்தில் மாற்றம் கொண்டுவர முடியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு அளவு மட்டும் தண்ணீர் கலந்திருக்குமானால், அது எங்கே ஏற்பட்ட கோளாறு என்று தெரியாது; அவர்கள் பெரும்பாலும் தண்டிக்கப்படுவதில்லை. அளவுக்குமீறி தண்ணீர் கலக்கப்பட்டால் அப்பொழுது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப் படுகிறது. சட்டம் இல்லையென்றால் தண்ணீர்தான் இருக்குமே தவிர, பால் இருக்காது. (சிரிப்பு.)

கோயம்புத்தூர் மாவட்ட தலைமை மருத்துவமனை

*** 34. வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்ட மருத்துவமனையில் சிறுநீர், ரத்தம், அறுவை செய்து எடுக்கப்படுகின்ற கட்டிகள், முதலியவற்றிற்கு உடனுக்கு உடன் பரிசோதனை செய்யப்படும் கருவிகள் இல்லை என்ற பற்றாக்குறையைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இத்தகைய சோதனைகளுக்குத் தேவைப்படும் வசதிகளும், சாதனங்களும், கோவை மாவட்ட மருத்துவ மனையில் உள்ளன.

திரு. சு. துரைசாமி : இந்த வினா 1968-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் கேட்டிருந்தேன். அப்போது இந்தக் குறைபாடுகள் அந்த மருத்துவ மனையில் இருந்தன. இப்படிப்பட்ட குறைபாடுகள் கூடுமான வரையில் மருத்துவ மனைகளில் வாராமல் இருப்பதற்காக முன்கூட்டியே நடவடிக்கைகள் எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : குறைபாடுகள் வாராதிருக்க நடவடிக்கைகள் எடுப்பது என்பது அரசின் பொதுக் கொள்கையாக இருந்தாலும் குறைபாடு வருகிறபோதுதான் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கிற அவசரம் ஏற்படுகிறது. 68-ல் உள்ள குறைபாட்டிற்கு, அதற்குப் பின்னர் அங்குள்ள மருத்துவக் கல்லூரியோடு தொடர்புடைய மருத்துவ மனையாக ஆக்கியிருப்பதால் இந்தக் குறைபாடுகளுக்கு இடமில்லாத வகையில் எல்லாவித பரிசோதனைகளுக்கும் இன்று வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. கருவிகளும் இருக்கின்றன.

திரு. கே. என். குமாரசாமி : போதுமான கருவிகள் இல்லை என்பது இல்லை. தேவையான மருந்துகள் இல்லாமல் வெளியே தனியார் கடைகளில் வாங்கிக் கொடுக்கவேண்டிய ஒரு நிலை அந்த ஆஸ்பத்திரியில் இருக்கிறது என்பதை அரசு அறியுமா ?